**Placement Camp: Distribution of placement orders for 3,450 people (19.12.2020)**

# தனியார் வேலை வாய்ப்பு முகாம்: 3,450 பேருக்குப் பணி நியமன ஆணை

உடுமலை, டிச.19: உடுமலையில்
நடைபெற்ற தனியார் வேலை
வாய்ப்பு முகாமில் தேர்வு செய்
பப்பட்ட 3,450 பேருக்குப் பணி
ியமன ஆணை சனிக்கிழமை
ழங்கப்பட்டது.
உடுமலை ஜிவிஜி விசா
ாட்சி மகளிர் கல்லூரியில்
ாவட்ட வேலை வாய்ப்பு மற்
ம் தொழில் நெறி வழிகாட்டும்
மயம் சார்பில் தனியார் வேலை
ாய்ப்பு முகாம் நடைபெற்றது.
இதில் சென்னை, கோவை,
ளிட்ட தமிழகத்தில் பல்
பகுதிகளில் செயல்பட்டு
ம 200க்கும் மேற்பட்ட தனி
நிறுவனங்கள் பங்கேற்றன.
ாமில் 7,150 பேர் நேர்காண
கு வந்திருந்தனர். இதில் தகு
ன் அடிப்படையில் தேர்வு
யப்பட்ட 3,450 பேருக்கு
நடை பராமரிப்புத் துறை
மச்சர் உடுமலை கே.ராதாகி



முகாமில் தேர்வு செய்யப்பட்டவருக்கு பணி நியமனஆணையை வழங்குகிறார் அமைச்சர் உடுமலை கே.ராதாகிருஷ்ணன். உடன் மாவட்ட ஆட்சியர் க.விஜயகார்த்திகேயன்.

ருஷ்ணன் பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

மாவட்ட ஆட்சியர் க.விஜயகார்த்திகேயன், மாவட்ட வருவாய்அலுவலர் கு.சரவணமூர்த்தி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் ஜெ.ரூபன்சங்கர்ராஜ், மகளிர் திட்ட இயக்குநர் கோமகள், வேலை வாய்ப்புத் துறை மண்டல இணை இயக்குநர் லதா மற்றும் துறை அதிகாரிகள் கலந்து கொண்டனர். இந்த முகாம் இரண்டாவது நாளாக ஞாயிற்றுக்கிழமையும் நடைபெற உள்ளது குறிப்பிடத்தக்கது.

# Republic Day Celebration (15.1.2021)



உடுமலை ஜி.வி.ஜி.விசாலாட்சி

## மகளிர் கல்லூரியில் குடியரசு தினவிழா

உடுமலை, ஜன.27–
உடுமலை ஸ்ரீ ஜி.வி.ஜி.விசாலாட்சி மகளிர் கல்லூரியில் குடியரசு தினவிழா நேற்று கொண்டாடப்பட்டது. விழாவையொட்டி தேசிய கொடியை கல்லூரி முதல்வர் என்.ராஜேஸ்வரி ஏற்றி வைத்து என்.சி.சி.மாணவிகளின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டார்.

விழாவில் பேராசிரியைகள், அலுவலக ஊழியர்கள் கலந்துகொண்டனர்.

உடுமலை கிழக்கு வட்டாரத்திற்குட்பட்ட மலையாண்டிபட்டினம் கிராமத்தில் காங்கிரஸ் கட்சியின் சார்பில் நடந்த விழாவில் வட்டார காங்கிரஸ் தலைவர் ஏ.எஸ். வெங்கடேஷ் தலைமை தாங்கினார், மாவட்ட விவசாயப் பிரிவு தலைவர் கே.சி.ராதாகிருஷ்ணன் முன்னிலை வகித்தார், தேசிய கொடியை மாவட்ட கவுன்சிலர் ஜி.ஜனார்த்தனன் ஏற்றி வைத்தார்.

மோகன்ராஜ், கோபால், சீனிவாசன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

டைந்த அவரை அக்கம்பக்கத்தினர் மீட்டு ஆம்புலன்ஸ் மூலம் உடுமலை அரசு மருத்துவமனைக்கு அழைத்து வந்தனர். அவரை பரிசோதனை செய்த டாக்டர்,

அவர் இறந்து விட்டதாக தெரிவித்தார்.

இதுகுறித்து உடுமலை போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# Social Service by NCC students (15.2.2021)



உடுமலை பஸ் ஸ்டாண்ட் ரவுண்டானாவில் உள்ள, அண்ணாதுரை சிலையை சுற்றி துாய்மை படுத்திய ஜி.வி.ஜி., மகளிர் கல்லுாரி என்.சி.சி., மாணவியர்.

## தேசத்தலைவர்களின் சிலை சுத்தப்படுத்திய மாணவியர்

**உடுமலை, பிப். 15–**

உடுமலை, ஜி.வி.ஜி., விசாலாட்சி பெண்கள் கல்லுாரி மாணவியர், தேசத்தலைவர்களின் சிலைகளை, துாய்மைப்படுத்தும் பணிகளை மேற்கொண்டனர்.

துாய்மை பாரத திட்டத்தின் கீழ், தேசிய மாணவர் படை மாணவர்கள், தேசத்தலைவர்களின் சிலைகளை துாய்மைப்படுத்த அனைத்து பள்ளிகளுக்கும் உத்தரவிடப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில், ஜி.வி.ஜி., விசாலாட்சி பெண்கள் கல்லுாரி தேசிய மாணவர் படை மாணவியர், இத்திட்டத்தின் கீழ், துாய்மைப்பணிகளை மேற்கொண்டனர்.

தேசிய மாணவர் படை அலுவலர் லெப்டினன்ட் டாக்டர் கற்பகம் தலைமையில், கல்லுாரி முதல்வர் ராஜேஸ்வரி வழிகாட்டுதல் அடிப்படையில், மாணவியர், உடுமலை குட்டைத்திடல் காந்தி சிலை, ரயில்வே ஸ்டேஷன் பகுதியில் உள்ள நேரு சிலை, பழைய பஸ் ஸ்டாண்டில் உள்ள காமராஜர் சிலை, பஸ் ஸ்டாண்டில் உள்ள அண்ணாதுரை சிலைகளை, துாய்மைப்படுத்தினர்.

# Training Workshop for College Professors (16.2.2021)

## பேராசிரியர்களுக்கு பயிற்சி பட்டறை

**உடுமலை, பிப். 16–**

உடுமலை, ஜி.வி.ஜி., விசாலாட்சி பெண்கள் கல்லூரியில், 'மாணவரை மையப்படுத்தும் கல்வி முறைகள்' தலைப்பில் பயிற்சி பட்டறை நடந்தது.

கல்லூரியில், தேசிய பல்கலைக்கழக நிதிக் குழுவின் பரமாஷ் திட்டத்தின் கீழ், 'மாணவரை மையப்படுத்தும் கல்வி முறைகள்' என்ற தலைப்பில் பல்வேறு கல்லூரிகளைச் சேர்ந்த பேராசிரியர்களுக்கு பயிற்சி பட்டறை நடந்தது.

பயிற்சியில், குடியாத்தம், தாராபுரம், திருப்பூர், பொள்ளாச்சி உள்ளிட்ட பகுதிகளின், கல்லூரி பேராசிரியர்கள் பங்கேற்றனர். கல்லூரி முதல்வர் ராஜேஸ்வரி தலைமை வகித்தார்.

திருச்சி செயின்ட் ஜோசப் கல்லூரி பேராசிரியர் விமல் ஜெரால்டு, கற்பித்தல் முறையில் தகவல் தொடர்பு தொழில்நுட்பங்கள் குறித்து செயல்முறை பயிற்சி அளித்தார்.

# Adoption of 'Unnat Bharat Abhiyan' by Five Villages (23.2.2021)

## ‘உன்னத் பாரத் அபியான்’ ஐந்து கிராமங்கள் தத்தெடுப்பு

**உடுமலை, பிப். 23–**

உடுமலை பகுதியிலுள்ள ஐந்து கிராமங்களை, ‘உன்னத் பாரத் அபியான்’ திட்டத்தில் ஜி.வி.ஜி., கல்லூரி தத்தெடுத்துள்ளது.

உடுமலை ஜி.வி.ஜி., விசாலாட்சி கல்லூரி, இந்த கல்வியாண்டு முதல் ‘உன்னத் பாரத் அபியான்’ திட்டத்தை செயல்படுத்தி வருகிறது.

இத்திட்டத்தின் கீழ், திருப்பூர் மாவட்டத்திலுள்ள வாளவாடி, தின்னபட்டி, கொடிங்கியம், ஜிலோப்பநாயக்கன்பாளையம், தீபாலபட்டி ஆகிய கிராமங்களை தத்தெடுத்துள்ளது.

இத்திட்டத்தின் ஒரு பகுதியாக, இக்கிராமங்களை ஆய்வு செய்வதற்காக, மூன்றாமாண்டு பயிலும் 55 மாணவியரும், ஏழு பேராசிரியர்களும் தரவுகளை சேகரித்தனர்.

திட்டம் சிறந்த முறையில் நடைபெற அனைத்து உதவிகளையும், கல்லூரி செயலாளர் சுமதி கிருஷ்ணபிரசாத், முதல்வர் ராஜேஸ்வரியும் செய்திருந்தனர்.

இப்பணியில், அவ்வூரைச்சேர்ந்த ஊராட்சித்தலைவர்கள், உதவியாளர்கள், பொதுமக்கள் ஒத்துழைப்பு வழங்கினர்.

இத்தகவலை கல்லூரி முதல்வர் தெரிவித்தார்.

# Skill Development Training for College Students (3.3.2021)



## கல்லூரி மாணவியருக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி

**உடுமலை, மார்ச் 3–**

'எதிர்காலத்தில் எவ்விதமான தொழில் சார்ந்த பிரச்னைகளையும் எதிர்கொள்ள வேண்டும்,' என, திறன் மேம்பாட்டு பயிற்சியில், மாணவியருக்கு அறிவுறுத்தப்பட்டது.

உடுமலை, ஜி.வி.ஜி., விசாலாட்சி கல்லூரியில், தன்னம்பிக்கையை அதிகரிக்கவும், மாணவியரை தொழில் முனைவோர்களாக மாற்றுவதன் முயற்சியாக, திறன் மேம்பாட்டு பயிற்சி முகாம் நடத்தப்பட்டு வருகிறது.

கடந்த மாதம், 25ல் துவங்கிய இப்பயிற்சி முகாம், இன்று நிறைவடைகிறது. கல்லூரி செயலர் சுமதி, முதல்வர் ராஜேஸ்வரி ஆகியோர் மேற்பார்வையில் ஆலோசகர் மஞ்சுளா தலைமையில் பயிற்சி முகாம் நடத்தப்படுகிறது.

இதில், காதணிகள், வளையல்கள், ஓவியம், அழகு ஒப்பனை மற்றும் தையல் என, தொழில் சார்ந்த பயிற்சி அளிக்கப்படுகிறது. அதில், 'எதிர்காலத்தில் எந்த விதமான தொழில் சார்ந்த மற்றும் சாராத பிரச்னைகளையும் எதிர்கொள்ள, தங்களை தயார் படுத்திக் கொள்ள வேண்டும்,' என மாணவியர் அறிவுறுத்தப்பட்டனர். இதற்கான ஏற்பாடுகளை மைய ஒருங்கிணைப்பாளர் புவனேஸ்வரி மற்றும் குழு உறுப்பினர் செய்திருந்தனர்.

## Training of Election Officers (19.3.2021)

# ஓட்டுச்சாவடி அலுவலர்களுக்கு பயிற்சி

## 3,386 பேர் பங்கேற்பு

**உடுமலை, மார்ச் 19–**

உடுமலை, மடத்துக்குளம் தொகுதிகளுக்கான, தேர்தல் அலுவலர்களுக்கு முதற்கட்ட பயிற்சி முகாம் நேற்று நடந்தது.

உடுமலை தொகுதியிலுள்ள, 380 ஓட்டுச்சாவடிகளில், தலைமை அலுவலர் மற்றும் 1,2,3 என, 1,946 பேர் நியமிக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு, உடுமலை ஜி.வி.ஜி., கல்லூரியில் முதற்கட்ட பயிற்சி முகாம் நடந்தது.

சமூக பாதுகாப்புத்திட்ட துணை கலெக்டர் சிவகாம சுந்தரி, உதவி தேர்தல் நடத்தும் அலுவலர் ராமலிங்கம், தேர்தல் துணை தாசில்தார் கிருஷ்ண வேணி மற்றும் மண்டல அலுவலர்கள் பயிற்சி அளித்தனர்.



ஜி.வி.ஜி., கல்லூரியில், ஓட்டு இயந்திரத்தை எப்படி பயன்படுத்துவது குறித்து, ஓட்டுச்சாவடி அலுவலர்களுக்கான பயிற்சி முகாம் நடந்தது.

மடத்துக்குளம் தொகுதிக்கு, உடுமலை ஆர்.ஜி.எம்., பள்ளியில் நடந்தது. இத்தொகுதியிலுள்ள, 357 ஓட்டுச்சாவடிகளில், 1,440 பேர் நியமிக்கப்பட்டுள்ளனர். மாவட்டக்கல்வி அலுவலர் பழனிசாமி, உதவி தேர்தல் நடத்தும் அலுவலர் கனிமொழி, தேர்தல் துணை தாசில்தார் தினேஷ் உள்ளிட்ட அதிகாரிகள் பங்கேற்றனர். பயிற்சியில், ஓட்டுச்சாவடிகளை தயார் செய்தல், வாக்காளர்களை தனி மனித இடைவெளி பராமரித்தல், ஓட்டுப் பதிவுக்கு பயன்படுத்தும் படிவங்கள், தேர்தல் பொருட்கள், ஏஜன்ட்கள் நியமனம், மின்னணு ஓட்டுப்பதிவு இயந்திரம் கையாளுதல், 'விவிபேட்' இயந்திரம் குறித்து விரிவாக விளக்கப்பட்டது.

கொரோனா பாதுகாப்பு அம்சங்களுடன், காலை, மதியம் என இரு பிரிவுகளாக பிரித்து, பயிற்சி முகாம் நடந்ததோடு, மையங்களில் சுகாதார துறை அதிகாரிகளை கொண்ட குழுவினர், பயிற்சியில் பங்கேற்றவர்களுக்கு கொரோனா தடுப்பூசி செலுத்தினர்.